# உச்சநீதிமன்றத் தீர்ப்பின் சாரம்! முதல் பக்கத் தொடர்ச்சி...

● மசோதாக்கள் மீது ஆளுநர் முடிவெடுக்காமல், 'முழுமையான வீட்டோ' அல்லது 'பாக்கெட் வீட்டோ' என்ற தனி அதிகாரத்தைச் செயல்படுத்தலாம் என்ற கருத்தை ஏற்க முடியாது. அரசமைப்பின் 201-ஆவது பிரிவின் கீழ் குடியரசுத் தலைவர் தனது கடமையை நிறைவேற்றுவதற்கு அவருக்கு 'பாக்கெட் வீட்டோ' அல்லது 'முழுமையான வீட்டோ' என எதுவும் வழங்கப்படவில்லை.

● மசோதாவுக்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது அல்லது நிறுத்தி வைக்கப்படுகிறது ஆகிய இரு தேர்வுகளில் ஒன்றை மட்டுமே குடியரசுத் தலைவர் தேர்வு செய்வதை அரசமைப்பின் 201-ஆவது பிரிவு கட்டாயமாக்குகிறது.

● அரசமைப்பின் 142 -ஆவது பிரிவின்படி, உச்சநீதிமன்றம் அதன் அதிகாரத்தைப் பயன்படுத்தி, தமிழக ஆளுநருக்கு மீண்டும் அனுப்பி வைக்கப்பட்ட மசோதாக்கள் ஒப்புதல் பெறப்பட்டவையாகக் கருதும் தகுதி பெறுகின்றன எனத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

● மாநில அமைச்சரவையின் உதவி மற்றும் ஆலோசனையின் பேரில், மசோதா மீது தனது ஒப்புதலை ஆளுநர் நிறுத்திவைத்தாலோ மசோதாவை குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு பரிந்துரைத்தாலோ அத்தகைய நடவடிக்கையை அவர் அதிகபட் சமாக ஒரு மாத காலத்துக்குள் எடுக்க வேண்டும்.

● மாநில அமைச்சரவையின் ஆலோசனைக்கு மாறாக ஆளுநர் ஒப்புதல் வழங்காவிட்டால், அது குறித்த தகவலுடன் மசோதாவை அவர் அதிகபட்சம் மூன்று மாதங்களுக்குள் திருப்பி அனுப்பவேண்டும். ஒருவேளை மாநில அமைச் சரவையின் ஆலோசனைக்கு மாறாக மசோதாவை குடியரசுத்

● தலைவருக்கு ஆளுநர் அனுப்புவதாக இருந்தால் அதை அவர் அதி கபட்சமாக மூன்று மாதங்களுக்குள் செய்ய வேண்டும். மசோதா மறுபரிசீலனைக்குப் பிறகு மீண்டும் ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட்டால் அதற்கு அவர் உடனடியாகவோ அதிகபட்சமாக ஒரு மாதத்துக்குள்ளாக ஒப்புதல் அளிக்க வேண்டும் என தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.



● இந்த உத்தரவுகளின் மூலம் ஆளுநரின் அலுவலக அதிகாரங்களை நீதிமன்றம் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால், நாடாளுமன்ற ஜனநா யகத்துக்கும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கும் மதிப்பளித்து ஆளுநர் செயல்பட வேண்டும் என்று நீதிபதிகள் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளனர்.

**ஆளுநரின் செயல்: நீதிபதி விமர்சனம்!**

● இந்த வழக்குடன் தொடர்புடைய மசோதாக்கள் ஆளுநர் ரவியிடம் நீண்ட காலமாக நிலுவையில் இருந்த நிலையில், ஆளுநர் அவற்றை குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்பியதன் மூலம் அவர் தெளிவுடன் நேர்மையற்ற செயல் புரிந்துள்ளார் என நீதிபதி ஜே.பி.பார்திவாலா விமர்சித்துள்ளார்.

● மேலும், இதேபோன்ற மசோதா தாமத விவகாரத்தில் பஞ்சாப் அரசு அந்த மாநில ஆளுநருக்கு எதிராக தொடர்ந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்த உடனேயே, தமிழக ஆளுநர் ரவி இரண்டாவது முறையாக தனக்கு அனுப்பப்பட்ட மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு பரிந்துரைத்துள்ளார். எனவே, அந்த மசோதாக்கள் அவரது மறுபரிசீலனைக்காக மாநில அரசால் சமர்ப்பிக்கப்பட்ட நாளில் இருந்தே அவை ஒப்புதல் அளிக்கப்பட்டவையாக தகுதி பெறுகின்றன என்று தீர்ப்பில் கூறியுள்ளார்.

**மசோதாவை மறுக்க மன்னருக்கே அதிகாரம் இல்லை!**

● உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் வெளிநாடுகளில் மசோதாவுக்கு எப்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது என்ற விவரத்தை பட்டியலிட்டுள்ளது. அதன்படி இங்கிலாந்தில் இரு சபை களும் மசோதா நிறைவேற்றிய பிறகு, அதற்கு மன்னர் ஒப்புதல் தர வேண்டும். கடந்த 1707-ம் ஆண்டு ராணி ஆன் என்பவர் ஒரு மசோதாவிற்கு மட்டும் ஒப்புதல் வழங்க மறுத்தார். அதன் பின் இன்று வரை எந்த மசோதாவுக்கும் மன்னர்கள் ஒப்புதல் தர மறுத்ததில்லை. அமெரிக்காவில் ஜனாதிபதி ஒப்புதல் மறுத்தால், இரு சபைகளும் 3-ல் 2 பங்கு பெரும்பான்மையுடன் மீண்டும் நிறைவேற்றி னால் மசோதா சட்டமாகிவிடும். பிரான்ஸ், ஜப்பான், இத்தாலி, ஜெர்மனி, சிங்கப்பூர், பாகிஸ்தான், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் ஜனாதிபதி ஒப்புதல் வழங்க காலக்கெடு உள்ளது. அயர்லாந்து நாட்டில் ஜனாதிபதி மசோதாவிற்கு ஒப்புதல் கொடுக்க மறுத்தால், அதனை உச்சநீதிமன்றத்திற்கு அனுப்பி விட வேண்டும்.

மேலும் நீதிபதிகள் தங்களது தீர்ப்பில் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அரசியலமைப்புச் சட்ட பேராசிரியர் நிக்கோலஸ் பார்பரின் கருத்துகளை மேற்கோள் காட்டி உள்ளனர்.

அதன் விவரம் வருமாறு:-

● ஒரு மன்னர் அல்லது ஜனாதிபதிக்கு சட்டங்களை மறுப்ப தற்கான அதிகாரத்தை வழங்குவது ஜனநாயகத்துக்கே எதிரானது. சுருக்கமாக சொன்னால், நாடாளுமன்றத்தில் முறையாக நிறைவேற்றப்பட்ட ஒரு மசோதா, மன்னரிடம் சமர்ப்பிக்கப்படும் போது, அதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும் என்பதே அவரது கடமை. இதில் தனிப்பட்ட விருப்பத்தேர்வுக்கோ, தீர்வுக்கோ இடமே இல்லை. மன்னர் மசோதாவிற்கு ஒப்புதலை மறுப்பது, அவர் அரசியலமைப்புக்கு முற்றிலும் எதிராக நடந்துகொள்ளுகிறார் என சொல்லப்பட வேண்டும்.

# தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி சிறப்புரை!

தஞ்சாவூர், ஏப்.15 .

தஞ்சை வடக்கு மாவட்ட அவசர செயற்குழு கூட்டம் 11.04.2025 மாலை 4.00 மணிக்கு கும்பகோணம் மாவட்ட கழக அலுவலகத்தில் அவைத்தலைவர் க.நசீர் முகமது தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள் கோவி.அய்யாராசு, எஸ்.நடராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான சு.கல்யாணசுந்தரம் கூட்டத் தின் தீர்மானங் களை விளக்கி சிறப்புரை யாற்றினார்.

இக்கூட்டத்தில் கும்பகோணம் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் சி.க.மறைமலை, கும்பகோணம் மாநகரக் கழகச் செயலாளர் சு.ப.தமிழழ கன், ஒன்றியச் செயலாளர்கள், பகுதிச் செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள் கலந்து கொண்டனர் கூட்டத்தில் கீழ் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதக்களை ஆளுநர் ஆர்.என்.ரவி நிறுத்தி வைத்து குடியரசு தலைவருக்கு அனுப்பி வைத்தது சட்டவிரோதமானது என்றும் ஆளுநர் செயல்பாடு நேர்மையானதாக இல்லை, அரசியல் அமைப்பு நோக்கத்திற்கு விரோதமாக இருக்கிறது என்றும் தமிழ்நாடு அரசு இரண்டாவது முறை நிறைவேற்றி அனுப்பிய மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளித்திருக்க வேண்டும். ஆளுநருக்கு வீட்டோ அதிகாரம் இல்லை என்றும் மாண்பமை உச்சநீதிமன்றம் சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி 10 மசோதாக்களுக்கும் அனுமதி வழங்கி பிறப்பித்த உத்தரவு என்பது தமிழக அரசுக்கும் திராவிட மாடல் அரசுக்கும் இந்தியாவில் உள்ள அனைத்து மாநில முதலமைச்ச ருக்கும் கிடைத்த வெற்றியாக பார்க்கப்படுகிறது. மேற்படி தீர்ப்பை பெற்ற தமிழக அரசுக்கும் கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதிக்கும் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்ளப்படுகிறது.

திராவிட முன்னேற்ற கழகம் என்பது தமிழக மக்கள் மட்டும் அல்லாமல் இந்தியாவிற்கு முன்னோடியாக கருத்துக்கள் தெரிவிப்பது என்ற நோக்கத்துடன் வக்பு வாரிய திருத்தச் சட்டம் 2025ஐ எதிர்த்து தி.மு.க. சார்பில் உச்ச நீதிமன்றத்தில் ரிட்மனு தாக்கல் செய்தும் தமிழக சட்டமன்றத்தில் அரசியலமைப்பிற்கு விரோதமாக சிறுபான்மை நலன்களை பாதிக்கும் சட்டம் என்பதால் உடனடியாக திரும்ப பெறுமாறு ஒரு தீர்மானத்தை நிறை வேற்றிய கழக தலைவர் தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மக்களவை தொகுதிகள் மறு சீரமைப்பு தொடர்பான பிரச் சினை தேசிய அளவில் கொண்டுவந்து எந்தந்த மாநிலங்கள் பாதிக்கப்படும் என்ற ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியதுடன் பாதிக்கப்பட்ட மாநிலங்கள் ஒன்றியத்தில் மறுசீரமைப்பு என்பது நியாயமான பிரதிநிதித்து வத்தை உறுதி செய்வதாக இருக்க வேண்டும் என்று எல்லோரையும் ஒரே குரலில் பேச வைத்த கழக தலைவர் தளபதியார் குரல் என்பது தேசிய பிரச்சனையை தேசிய அளவில் கொண்டு சென்ற கழக தலைவர் தமிழக முதல்வர் தளபதி அவர்களுக்கு நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

2026 தேர்தலை எதிர்நோக்கும்பொருட்டும், தேர்தல் முடியும் வரை கழக வளர்ச்சிக்காக தலைமை கழகம் மூலம் தொடர்ந்து தமிழ்நாட்டின் உரிமைகளைப் பெற நாம் போராட வேண்டியிருக்கும். குறிப்பாக தொகுதி மறுசீரமைப்பு மும்மொழி த்திட்டம் எதிர்ப்பு மற்றும் நமது கழக ஆட்சியின் திட்ட ங்கள், செய்திகளை மக்களிடத்தில் கொண்டு சேர்க்கும் வகையில் மாநகர, ஒன்றிய, பேரூர் மாநகர பகுதி வட்ட கழகங்களில் சுவர் விளம்பரங்கள், சுவரொட்டிகள், துண்டு பிரசு ரங்கள், தெருமுனை கூட்டங்கள் ஆகியவற்றை தொடர்ந்து தலைமை கழகம் அறிவிக்கும் போது செய்ய வேண்டும்.

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் ஆலோசனையின்படி 30.03.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று, உதகையில் நடைபெற்ற தி.மு.கழக மாணவரணி கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மா னத்தின் படி இல்லந்தோறும் மாணவர் அமைப்பை ஏற்படுத்துவதன் முன்னெ டுப்பாக, நமது தஞ்சை வடக்கு மாவட்டத்தில் உள்ள திருவி டைமருதூர் (293 பூத்), கும்ப கோணம் (289 பூத்) மற்றும் பாபநாசம்(301 பூத்) ஆகிய மூன்று சட்டமன்றத் தொகுதியில் உள்ள ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் தலா 5 மாணவர் தொடர்பாளர்கள் வீதம் 883 வாக்குச்சாவடிகளுக்கு நடப்பு கல்வியாண்டில் பயிலும் அருகில் உள்ள மாணவர்களுடன் எளிமையாக பழகக்கூடிய மாணவர்களுக்கு அறிமுகமான தகுதியான மாண வர்கள் தொடர்பாளர்களை கண்டறிந்து அவர்கள் பெயர், முகவரி , தொடர்பு எண், மற்றும் வாட்சப் எண் அடங்கிய பட்டியலை ஏப்ரல் மாதம் 25ம் தேதிக்குள் தலைமை கழகத்திற்கு அனுப்புவதற்கு ஏதுவாக மாவட்ட கழகத்திற்கு வழங்கிட வேண்டும்

குறிப்பு - வாக்குச்சாவடிகளில் புதிதாக இணைக்கப்படும் மாணவர்கள் 2026 சட்டமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்கு ஏதுவாக அவர்களை புதிய வாக்காளர்களாக சேர்க்கவும் உதவுவதுடன், அவர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி கழக செயலாளர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட BLC கையேடுகளை பூர்த்தி செய்தும் வாக்காளர் பட்டியல் சரிபார்த்தும் 100 நபர்களுக்கு ஒருவர் என்றும் BLCயிடம் வாக்காளர் பட்டியல் இருத்தல் வேண்டும் மற்றும் பூத் BLAவிடம் ஒரு வாக்காளர் பட்டியல் இருக்க வேண்டும்.

கழக பொறுப்பாளர்கள் ஒரு பொறுப்புக்கு மேல் வைத்துக் கொண்டு இருப்பவர்களை கண்டு அவர்களுக்கு பதிலாக வேறு ஒரு நபரை நியமிக்கவும் இறப்பினால் அல்லது வெளியூர் சென்றதால் காலியாக உள்ளதும் அல்லது செயல்படாமல் இருப்பவர்களை நீக்கியும் பட்டியலை உடன் வழங்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

## மதச்சார்பின்மையை மாய்க்கும் ஆளுநர் ரவி!




# அண்ணல் அம்பேத்கரின் சிந்தனை முத்துக்கள்!



● "என்னைவிட உயர்ந்தவன் இருக்கிறான் என்று தாழ்த்தப்பட்டவன் எண்ணிக் கொள்கிறான்; என்னைவிடத் தாழ்ந்தவன் இருக்கிறான் என்று உயர்ந்த நிலையில் உள்ளவன் எண்ணிக் கொள்கிறான்; இரண்டுமே நல்லதல்ல! உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதிஎன்றவார்த்தைகளைப் பயன்படுத்துவதே தவறு."

● **"சுயமரியாதையே மனிதனின் சிறந்த அடையாளம்! அதை இழந்து வாழ்வது மிகப் பெரிய அவமானம். சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்வது எளிதான காரியமல்ல. பல துன்பங்களை எதிர்கொள்ளும்படி இருக்கும்; கடினமாகவும் போராட வேண்டியிருக்கும்."**

● "இந்தச் சமூகம் தீண்டத்தகாதவர்களைத் தனக்குத் தேவையானபோது மட்டும் பயன்படுத்திக் கொண்டு மற்ற நேரங்களில் ஒதுக்கி வைத்துவிடுகிறது. செருப்பைப் போட்டிருப்பவன் வீட்டுக்கு வெளியிலேயே அதைவிட்டுவிட்டு உள்ளே சென்று விடுவதுபோல சமூகம் தீண்டத்தகாதவர்கள் என்று கூறி சிலரை மட்டும் தள்ளிவைத்துவிடுகிறது."

● "மதம், சமத்துவத்தை வளர்க்க வேண்டும். அடிமைத்தனத்தை அல்ல! தன்னைப் பின்பற்றுபவர்களையே கடையனாக்கித் தண்டிக்கிற அமைப்பு எப்படி மதமாக இருக்க முடியும்?"

● "நீங்கள் வளைந்து கொடுத்து வாழ முயற்சிப்பீர்கள். ஆனால் அது வாழ்க்கை ஆகாது! நாட்டுக்காகவும் நல்ல நோக்கத்துக்காகவும் சகலத்தையும் விட்டுவிடத் துணிவதே நல்ல வாழ்க்கையாகும். ஒதிய மரம் போல பயனற்றுப் பலகாலம் வாழ்வதா? ஒரு உன்னத லட்சியத்துக்காக இன்னுயிர் ஈவதா? எது நல்லது என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்!"

● **"வறுமை யாருக்கும் விதிக்கப்பட்டதில்லை! அது உடன் பிறந்ததோ, தீர்க்க முடியாததோ அல்ல! "இது விதி' என்றோ "இதுதான் விதி' என்றோ எண்ணிக் கொள்ளாதீர்கள்!**

● "பாகுபாடு, அதனால் எழும் வெறுப்பு, இனவெறி, தீண்டாமை, வன்முறை போன்றவற்றை எல்லாம் ஒழிக்கவல்ல மிகவும் சக்தி வாய்ந்த ஆயுதம் கல்வி"

● **"பெண்கள் அடைந்த முன்னேற்றத்தின் அளவைக் கொண்டு ஒரு சமூகத்தின் முன்னேற்றத்தை நான் அளவிடுகிறேன்."**

● "உங்களிடம் இரண்டு ரூபாய் இருந்தால், ஒரு ரூபாயை உணவுக்கும், ஒரு ரூபாயை புத்தகத்திற்கும் எடுத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் உணவு உங்களுக்கு வாழ உதவும், ஆனால் எப்படி வாழ வேண்டும் என்பதை புத்தகம் கற்றுக் கொடுக்கும்."

● "ஆகவே கல்வி என்பது நமது பிறப்புரிமை! உரிமைகள் பறிக்கப்படுவதும், மறுக்கப்படுவதும் தடுக்கப்பட வேண்டுமானால் நிச்சயம்.... கல்வி அனைவருக்கும் கிடைக்கப் பெற வேண்டும்! சமமாக கிடைக்கப் பெற வேண்டும்."